# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI
## C.C.No.115/2022

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கோவிந்தராஜன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.02.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் திருவேகம்பத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 25.01.2022 ம் தேதி சிவகங்கையில் உள்ள இணை இயக்குநர் அலுவலகத்திற்கு எதிரி மீது புகார் வந்திருப்பதாக சொல்லி மாவட்ட சித்த மருத்துவர் அலுவலர் அது குறித்து விசாரிக்க வேண்டும் என்று போலி மருத்துவர்கள் ஒழிப்பு குழுவில் நானும் ஒரு உறுப்பினராக இருப்பதால் என்னை போக சொன்னார்கள். தேவகோட்டை இராம்நகரில் உள்ள எதிரியின் கிளினிக்கிற்கு ஆய்விற்காக சென்றோம். என்னுடன் இணை இயக்குநர் டாக்டர் இளங்கோ மகேஷ்வரன், டாக்டர் ரமேஷ்பாபு, மருந்து ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் ஆகியோர்கள் ஆய்வுக்கு சென்றிருந்தோம். 25.01.2022 ம் தேதி காலை 11 மணிக்கு எதிரியின் கிளினிக்கிற்கு சென்றோம். அங்கு போய் பார்த்தபோது அவர் மருத்துவம் படித்தற்கான எந்த சான்றிதழ்களையும் வைத்திருக்கவில்லை. அங்கு ஆங்கில மருந்துகள், சித்த மருந்துகள், ஹோமியோபதி மருந்துகள் வைத்திருந்து நேயாளிகளுக்கு மருத்துவம் பார்த்ததை நாங்கள் பார்த்தோம். அவரிடம்

படித்ததற்கான சான்றிதழ்கள் ஏதுவும் இல்லாததால் அ.சா.1 போலீசாரிடம் புகார் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகாரில் இடது புறம் உள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி கையொப்பம் அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நாங்கள் ஆய்விற்கு சென்றபோது வீடியோ எதுவும் எடுத்தோமா என்றால், ஆமாம் எடுத்தார்கள். மேற்படி வீடியோவை காவல் துறையிடம் ஒப்படைத்தார்கள். நாங்கள் போகும்போது எதிரியின் கிளினிக் என்ன மாதிரியாக அமைப்பில் இருந்தது என்றால் வெளியில் டாக்டர் சேவியர் என்று போர்டு இருந்தது, கன்சல்டிங் அறை தனியாக இருந்தது, மருந்துகள் எடுத்து அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. நாங்கள் போனபோது நோயாளிகள் இருந்தார்களா என்றால் இல்லை. எங்கள் ஆய்வில் அவர் யாருக்கும் சிகிச்சை அளித்ததாக யாரிடமாவது வாக்குமூலம் பெற்றிருக்கிறோமா என்றால் இல்லை. எதிரியின் அறையில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் எவை எவை சித்தா மருந்துகள் என்று சொல்லமுடியுமா என்றால் கைப்பற்றப்பட்ட மருந்துகளுக்கான பட்டியலில் உள்ள 27 வது மருந்தான ferrumsip syrup, 30 வது மருந்தான tonsilat, 32 வது மருந்தான sinus gold drops, 42 வது மருந்தான rheuma ஆகியவை சித்தா மருந்துகள் ஆகும். மேற்படி மருந்துகள் அனைத்தும் ஹோமியோபதி மருந்துகள் என்றால் மருந்தைப் பார்த்தால்தான் சொல்ல முடியும். நான் சித்த மருத்துவம்தான் படித்துள்ளேன் என்றும், ஹோமியோபதி படிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியிடமிருந்து எந்த சித்த மருந்துகளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கைப்பற்றிய பொருட்கள் அனைத்தையும் சிவராமகிருஷ்ணனிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் நாங்கள் எதையும் கைப்பற்றவில்லை நாங்கள் ஆய்வு செய்து மருந்து ஆய்வாளர் சிவராமகிருஷ்ணனை கைப்பற்ற சொன்னோம். நாங்கள் ஆய்விற்கு சென்றபோது எதிரி சித்த மருந்துகள் எதுவும் வைத்திருந்தாரா என்றால் இல்லை. அ.சா.1 னிடம் எதிரியின் கிளினிக்கில் எந்த சித்த மருந்துகளும் இல்லை என்பதை சொன்னேனா என்றால் சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் எதிரியின் கிளினிக்கில் எந்த சித்த மருந்துகளும் இல்லை என்பதை சொன்னேனா என்றால், அவர்கள் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. அ.சா.1 புகாரில் எதிரி சித்த மருத்துவம் பார்த்ததாக சொல்லப்பட்டிருந்தால் அது பொய்தானே என்றால் ஆமாம். எதிரி படித்த

ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் எதிரி சில சான்றிதழ்களின் நகலை கொடுத்தார், அவை எதுவும் அங்கீகரிக்கப்ட்ட படிப்பு இல்லை, அவ்வாறு கால அவகாசம் எதுவும் கொடுக்கப்படவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது மதியம் 1 மணி இருக்கும். எதிரியை காவல் நிலையம் அழைத்துச் சென்று புகார் கொடுத்தோமா அல்லது பிறகு அழைத்து வந்தார்களா என்றால் எங்களுடன் ஆய்வுக்கு போலீசார் வந்திருந்தார்கள். மேற்படி போலீசார் எதிரியை கைது செய்து அழைத்து வந்தார்கள் என்றும் அதன்பிறகு நாங்கள் சென்று புகார் கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். புகார் கொடுத்த அன்று மாலை 5 மணியளவில் போலீசார் விசாரித்தார்கள், அதன்பிறகு விசாரிக்கவில்லை. அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து எந்த சித்த மருந்துகளும் கைப்பற்றவில்லை என்றும் புகாரில் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.